நாள்.08.04.2026

**அசல் வழக்கு எண். 69/2017**

**பெயர். மதியழகன்**

**த.பெ. முருகையன்**

**<u>வா.சா.1– 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ராஜம்மாள் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் முருகையன், காசியம்மாள், ராசாம்பாள், அமிர்தலிங்கம், நாகலிங்கம், ராமசாமி. இதில் யார் யார் உயிருடன் உள்ளார் என்றால் யாருமே இல்லை. என் அப்பாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 8 பேர். நான் மட்டும்தான் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் ஆமாம். மற்றவர்களை தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். ராமசாமியின் வாரிசுகள் எத்தனை பேர் என்றால் 5 பேர். அதில் 4 பேர் உயிருடன் உள்ளார்கள். அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். அமிர்தலிங்கம் 1ம் பிரதிவாதியின் அப்பா என்றால் ஆமாம். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பேர். இளங்கோ, சண்முகவேல், பாலகுமார், உமாமகேஸ்வரி. அவர்களில் 1ம் பிரதிவாதியை தவிர மற்றவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் ஆமாம்.

1ம் பிரதிவாதி இளங்கோ எந்த வருடம் இறந்தார் என்றால் சரியாக தெரியவில்லை. எப்படி இறந்தார் என்றால் தெரியாது. வழக்கு நிலுவையில் இருந்தபோது நான் ஒரு தான பத்திரம் எழுதிக்கொடுத்தேனா என்றால் ஆமாம். என் அக்கா அஞ்சம்மாளுக்கு எழுதிக்கொடுத்தேன். எந்த தேதியில் எழுதிக்கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. பத்திரம் பார்த்தால்தான் தெரியும். வழக்கை எத்தனை வருடமாக நடத்திவருகிறேன் என்றால் 2017 லிருந்து. நாளது தேதிவரை வழக்கு சொத்திற்குண்டான உரிமை என்னிடம் இல்லை என் அக்காவிற்குதான் உரிமை உள்ளது என்றால் உயிலை வைத்துதான் வழக்கு தாக்கல் செய்தேன். அதனால் எனக்கு உரிமை உண்டு. அமிர்தலிங்கத்திடமிருந்து என் அக்கா அஞ்சம்மாள் பாக விடுதலை பத்திரம் 03.05.2021 ல் எழுதிக்கொடுத்துள்ளார் எனக்கு அது பற்றி தெரியுமா என்றால் தெரியும். அப்போது நானும் பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் 2,3 நாட்கள் கழித்து தெரிந்துகொண்டேன். யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் 1ம் பிரதிவாதியின் மகன் பாலகுமார் போட்டுள்ளார் மற்றவர் யாரென்று தெரியவில்லை. வா.சா.ஆ.6 ல் மற்ற வாரிசுகள் கையெழுத்து போடாததால் அந்த ஆவணம் செல்லாது என்றால் எனக்கு தெரியாது.

ராஜம்மாள் வீட்டிற்கு பக்கத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர் எல்லோரோடும் சகஜமாக பழகுவார் என்றால் ஆமாம். ராஜம்மாள் எந்த வருடம் இறந்தார் என்றால் 18.03.2014. உயில் எப்போது எனக்கு எழுதப்பட்டது என்றால் 25.02.2014. உயில் எழுதியபிறகு 18 நாளில் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். ராஜம்மாள் இறக்கும் தருவாயில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தாரா என்றால் நன்றாகதான் இருந்தார். அவருக்கு உடல் உபாதைகள், சர்க்கரை நோய் இருந்ததா என்றால் இல்லை. என் அத்தை ராஜம்மாள் பெயரிலுள்ள சொத்திற்கு சர்வே எண். 84/7 என் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டேனா என்றால் ஆமாம். என் அத்தைக்கு தெரியாமல்தான் அதை மாற்றினேன் என்றால் ஆமாம். தண்ணி தீர்வை அதைவைத்துகொண்டு மாற்றினேன். RDO கோர்ட்டிற்கு ராஜம்மாள் சென்றார் நான் DRO கோர்ட்டிற்கு சென்றேன் அதன்பிறகு ராஜம்மாள் என் பெயருக்கே சொத்தை எழுதிக்கொடுத்தார். RDO கோர்ட்டில் பட்டா என் பெயரில் தவறாக மாறிவிட்டது என்றுதான் தீர்ப்பானது என்றால் சரிதான். DRO கோர்ட்டிற்கு நான் மேல்முறையீடு செய்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம் ஆனால் ஆவணம் என்னிடம்உள்ளது. அதனால் எனக்கும் என் அத்தைக்கும் மன வருத்தம் இருந்தது என்றால் இல்லை.

தாவா சொத்தை பொறுத்து RDO கோர்ட்டில் வழக்கு நடந்ததா என்றால் ஆமாம். அதில் எனக்கு பாதகமாக தான் தீர்ப்பானது என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துகொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். அதன்பேரில் நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் ஆமாம். என் அத்தை வீட்டு குடித்தனம்தான் தனிப்பட்ட முறையில் வருமானம் கிடையாது என்றால் ஆமாம். வழக்கு சொத்து ராஜம்மாள் கணவர் வழி வந்த சொத்து என்றால் ஆமாம். அவருக்கு நேரடி வாரிசுகள் கிடையாது என்றால் ஆமாம். இரண்டாம் தார வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் உயில்படி சொத்து எனக்கு சொந்தம் என்று கேட்டுள்ளேன். உயிலில் சாட்சி கையெழுத்து யார் போட்டார்கள் என்றால் சுப்பிரமணியன். அவர் உறவுக்காரரா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் அவர் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் தெரியாது. உயிலில் எத்தனைபேர் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் உயிலை பார்த்து மற்றொரு சாட்சி யார் கையெழுத்து போட்டுள்ளார் என்று தெரியவில்லை என்று சொல்கிறார். உயிலை எந்த வருடம் தெரிந்துகொண்டேன் என்றால் ராஜம்மாள் இறந்தபிறகு

தெரிந்துகொண்டேன். 2014 ல் தெரிந்துகொண்டேன் என்றால் ஆமாம்.

ராஜம்மாள் உயிலை எழுதும்போது சுயநினைவில் இல்லை என்று பிரதிவாதிகள் சொல்கிறார்கள் என்றால் ஆரோக்கியமாகதான் இருந்தார். ஏற்கெனவே சொத்து சம்பந்தமாக எனக்கும் ராஜம்மாளுக்கும் மனவருத்தம் இருந்தது அதனால் வழக்கு சொத்தை எனக்கு உயில் எழுதிவைக்க அவசியம் இல்லை என்றால் அப்படி எல்லாம் இல்லை. இந்த வழக்கில் தேவையான தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. உயில் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged* ***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.